# வாடிக்கையாளர்களுக்கான அறிவித்தல்

**சமீபத்திய சூறாவளி மற்றும் வெள்ள அனர்த்தத்தினால் பாதிக்கப்பட்ட தனிநபர்கள் மற்றும் வியாபாரங்களுக்கான நிவாரண நடவடிக்கைகள் (2005 ஆம் ஆண்டின் 04 இலக்க இலங்கை மத்திய வங்கி சுற்றறிக்கைக்கு அமைவானது)**

## தகுதிநிலை மற்றும் கட்டாய தேவைப்பாடுகள்

- *சமீபத்திய சூறாவளி மற்றும் வெள்ள அனர்த்தத்தினால் வருமானம் அல்லது வியாபாரம் நேரடியாகப் பாதிக்கப்பட்ட வாடிக்கையாளர் (பாதிக்கப்பட்ட வாடிக்கையாளர்)*

## கட்டாயத் தேவைப்பாடுகள்

- *வாடிக்கையாளர் எழுத்துமூல அல்லது இலத்திரனியல் மூலமான கோரிக்கையினை* **15 ஜனவரி 2026** *அன்று அல்லது அதற்கு முன்னதாக சமர்ப்பிக்க வேண்டும்.*

## ஏற்பாடுசெய்யப்பட்டுள்ள நிவாரண நடவடிக்கைகள்

- *தற்போதுள்ள கடன் வசதிகள் மீதான மூலதன மீள்கொடுப்பனவு மற்றும்/அல்லது வட்டி என்பன வங்கியின் தற்றுணிபின்பேரில் 3 தொடக்கம் 6 மாதங்களுக்கு இடைநிறுத்தப்படும்.*
- *வங்கியின் தீர்மானமானது அனர்த்தத்திற்கு பின்னரான சூழலில் காணப்படும் இடர்கள், இடைக்காலத் தவணையில் கடன்பெறுநரின் எதிர்கால மீள்செலுத்தும் இயலாற்றல் மற்றும் சாத்தியக்கூறுகள் என்பவற்றை கருத்திற்கொண்டு விடயத்திற்கு விடயம் என்ற அடிப்படையில் மேற்கொள்ளப்படும்.*

## இடைநிறுத்தத்தின்போதான வட்டி நிவாரணம்

- *இடைநிறுத்தக் காலத்தில் ஒப்பந்த வீதத்திற்கு மேலாக வட்டி அறிவிடப்படமாட்டாது.*
- *ஒத்திவைக்கப்பட்ட வட்டி மீது வட்டி அறவிடப்படமாட்டாது ("வட்டிக்கான வட்டி" இல்லை)*

## பாதிக்கப்பட்ட வாடிக்கையாளருக்கான புதிய கடன் வசதிகள்

- *பாதிக்கப்பட்ட வாடிக்கையாளரின் கடன் சேவை இயலாற்றலைப் பொருத்து, விடயத்திற்கு விடயம் என்ற அடிப்படையில் வங்கி புதிய கடன்களை வழங்கும்*
- *இடைநிறுத்த காலப்பகுதி முடிவடைந்ததன் பின்னர்* **குறைந்தபட்சம் 3 மாத சலுகை காலப்பகுதி** *வழங்கப்படும்.*

## புதிய கடன்களுக்கான வட்டி உச்சவரம்புகள்

- **2 வருடங்கள் வரையிலான கடன்கள்:**
  - **ஆண்டொன்றுக்கு 9%** *அதிகூடிய நிலையான வட்டி அல்லது*
  - *கடன்பெறுநரின் தற்போதைய ஒப்பந்த வீதம் (மேலதிகப்பற்று/கடன்) (குறைவானது எதுவோ அது)*

- **2 வருட காலப்பகுதிக்கு மேற்பட்ட கடன்கள்:**
    - முதல் 2 வருடங்களது வட்டி வீதமானது மேலே குறிப்பிடப்பட்ட 2 வருட காலப்பகுதிக்கு செல்லுபடியாகும் வட்டி வீதத்திற்கு அமைவானதாக காணப்படுதல் வேண்டும் ;
    - வட்டி வீதங்கள் 2 வருடங்களின் பின்னர் திருத்தப்படலாம். (விபரங்கள் வசதி உடன்படிக்கையில் குறித்துரைக்கப்படுதல் வேண்டும்)

**கட்டணங்கள் மற்றும் அறவீடுகள் மீதான நிவாணரம் (2026 ஜனவரி 31 ஆந்திகதி வரையில்)**

- காசோலை திரும்பலுக்கான அறிவீடு
- நிறுத்தப்பட்ட கொடுப்பனவுகள்
- பிந்திய கொடுப்பனவு கட்டணங்கள்
- கடன் மீளமைப்பு/மறுசீராக்க கொடுப்பனவுகள்

என்பன அறிவிடப்படமாட்டாது.

- தண்ட வட்டி அறவிடப்படமாட்டாது

- மேற்குறித்த கட்டணங்கள் முறைமையினால் தன்னியக்கமாக விதிக்கப்படுமெனில், மீளளிப்புகள் **3 வியாபார நாட்களுக்குள்** செயன்முறைப்படுத்தப்படவேண்டும்.

**மேலதிக விபரங்கள் மற்றும் உதவிகளுக்கு, தயவுசெய்து கிளையின் பணியாளர்களை தொடர்பகொள்ளவும்.**